## மேட்டுப்பாளையம் நகராட்சி

28.06.2019ம் தேதி புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

### <u>கூட்டப் பொருள்</u>

1. மேட்டுப்பாளையம் நகராட்சி காரமடை நீரேற்று நிலையத்தில் இருந்து இந்திய அரசு அச்சகத்திற்கு செல்லும் பம்பிங் மெயின் நெடுஞ்சாலைத் துறையால் (N.H) சாலை விரிவாக்கம் செய்யும் பொருட்டு அடிக்கடி உடைப்பு ஏற்படுவதை சரி செய்ய 28.05.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 11.06.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு. ஜி.கே.எஸ்.சேதுபதி,<br>3/222, கிட்டாம்பாளையம், காரமடை | ரூ.2,00,000/– | 1.07%<br>அதிகம் |
| 2 | திரு. எம்.வேலுச்சாமி,<br>6 E.B. காலனி, மேட்டுப்பாளையம் | ரூ.2,00,000/– | 0.01%<br>குறைவு |

**அலுவலகக் குறிப்பு** : மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மற்றதை விட குறைவாக உள்ளதால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s M.வேலுச்சாமி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க குடிநீர் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.000373/2019/இ1

2. மேட்டுப்பாளையம் நகராட்சியில் 6 ஆண்டுகள் செய்த வளர்ச்சி பணிகள் மற்றும் 2018ஆம் ஆண்டு மாலைமலர் தொழில் மலரில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கு மாலைமலர் நாளிதழிலிருந்து வரப்பெற்ற தொகையினை 31,500 + 16,275/–ஐ மாலைமலர் நாளிதழுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3372/2018/இ1

3. திரு.ஜே.செந்தில்குமார் ஒப்பந்ததாரர் அவர்களால் மேட்டுப்பாளையம் ஜவஹர்லால் பேருந்து நிலையத்தின் கிழக்கு பகுதியில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொண்டதற்காக பிடித்தம் செய்யப்பட்ட தொகை 1% ரூ.82,000/– 2013–14ம் ஆண்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்கம் எண்.39 வரிசை எண்.29ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படியாருக்கு இத்தொகை வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.

ந.க.எண். 6101/2018/இ1

| | |
|---|---|
| 4. | திரு.ஜே.செந்தில்குமார் ஒப்பந்ததாரர் அவர்களால் மேட்டுப்பாளையம் ஜவஹர்லால் பேருந்து நிலையத்தின் மேற்குப் பகுதியில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொண்டதற்காக பிடித்தம் செய்யப்பட்ட தொகை 1% ரூ.68,000/– 2013–14ம் ஆண்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்கம் எண்.39 வரிசை எண்.28ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படியாருக்கு இத்தொகை வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 6104/2018/இ1 |
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குச் சொந்தமான நவீன எரிவாயு தகன மேடையின் பராமரிப்பு பணிகளை தற்சமயம் Rotary Mettupalayam Crematorium Trust மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது தகன மேடையில் விறகு மூலமாக எரியூட்டப்பட்டு வருவதால் பராமரிப்புச் செலவு அதிகமாகிக் கொண்டு உள்ளதால் தகன மேடையில் தங்கள் சொந்த செலவில் LPG burner மூலம் எரியூட்டுவதற்கு அனுமதி கோரி அளித்துள்ள Rotary Mettupalayam Crematorium Trust கடிதத்தினை பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : பதிவு செய்யலாம்.<br>ந.க.எண். 1604/2019/இ1 |
| 6. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள 12 நகராட்சி பள்ளிகளிலும் கழிவறைகள் மற்றும் வளாகத்தினை தூய்மை பராமரிக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் எண்.32050/2016/ஜே2, நாள்.26.10.2017 அரசாணைப்படி பள்ளி கல்வி மற்றும் நகர/ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளின் கீழ் உள்ள அனைத்து பள்ளிகளிலும் உள்ள கழிவறைகளை பராமரிக்க , துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்படும் தொகையினை கல்வி நிதியின் மூலம் மேற்கொள்ள குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>அதன்படி , மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள 12 நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள் மற்றும் பள்ளி வளாகத்தினை சுத்தம் செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 18.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நகராட்சி கல்வி நிதியின் மூலம் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். |
| 7. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான பகவான் மஹாவீர் சங்கர் நகர் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் இப்பள்ளியில் கூடுதல் மாணவர்கள் உள்ளதால் இப்பள்ளியின் தலைமை ஆசிரியை கூடுதல் வகுப்பறை கட்டி தரும்படி வேண்டியுள்ளார். இதன் அடிப்படையில் இப்பள்ளியில் கூடுதலாக நான்கு வகுப்பறைகள் கட்ட ரூ. 40.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணிகளை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம். |

| | |
|---|---|
| 8. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வள்ளுவர் நகரவைத் தொடக்கப்பள்ளியில் இந்த கல்வியாண்டில் 2019–20ல் கூடுதல் மாணவர், சேர்க்கை உள்ளது. இதனால் கூடுதல் வகுப்பறை வேண்டி வள்ளுவர் நகரவை தலைமை ஆசிரியர் அவர்களின் கடிதத்தின் அடிப்படையில் ஒரு கூடுதல் வகுப்பறை கட்டுதற்கு மதிப்பீடு ரூ. 9.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்வி நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். |
| 9. | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண். 8ல் உள்ள மகாஜன பள்ளி பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆணையாளர் குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. அக்கட்டிடத்திற்கு பாதுகாப்பினை கருதி சுற்று சுவர் கட்ட ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மேலும் பணியினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1643/13/இ1 |
| 10. | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண். 9 மகாதேவபுரம் குறுக்கு சாலையில் உள்ள தரைதளம் பழுதடைந்து பொதுமக்கள் செல்வதற்கு வழி இல்லாமல் இருக்கிறது. இத்தரைபாலத்தினை அகற்றி புதியதாக தரைபாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கும் மேலும் இப்பணியினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1643/2013/இ1 |
| 11. | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண். 9 மகாதேவபுரம் ஆலமர பிள்ளை தெரு நியாய விலை கடை அருகில் உள்ள தரைபாலம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. வண்டிகள் இவ்வழியே செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே, மேற்கண்ட தரை பாலத்தினை புதியதாக அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.70 இலட்சத்திற்கும், மேலும் இப்பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1643/2013/இ1 |
| 12. | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண்.22 போரையா கவுடர் தெரு அருகில் டேன் இந்தியா சாலையில் உள்ள தரைபாலம் சுவர்பழுதடைந்து பொது மக்களுக்கு இடையூறாக உள்ளது. மேலும் வாகனங்கள் செல்ல முடியாமல் இருப்பதால் இந்த தரை பாலத்தினை மராமத்து பணி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 1.00 இலட்சத்திற்கும், மேலும் இப்பணியினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1643/2013/இ1 |

## மேட்டுப்பாளையம் நகராட்சி

26.06.2019ம் தேதி புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

### <u>கூட்டப் பொருள்</u>

1.

நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண்.48800/2006/எல் நாள்.20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 01.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களைஅனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை(எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2). மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழ்க்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3). தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service) கீழ் தேர்வுநிலை நகராட்சிகளுக்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்க்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நகராட்சி கணக்கு அலுவலர் | Municipal Accounts Officer | 1 |
| கணக்கர் | Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யோக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (TamilNadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்க்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class IV கணக்கர் பணியிடம் ஒன்று மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடம் ஒன்று.

<u>அலுவலகக் குறிப்பு</u>: **மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண்.** 2457/2017/சி1